செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

விலை சதம் — 10

# விடுதலை

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம் என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்"

முரசு 4 | திருவள்ளுவர் ஆண்டு 1999 புரட்டாதி 15 (1-10-1968) | முழக்கம் 25

உங்கள் தீபாவளிப் புத்தாடைகளைத் தெரிவு செய்ய

சாறி எம்போறியம்

SAREE EMPORIUM

★ மலிவு விற்பனை ★

உங்களை அழைக்கின்றது.

7-10-68 தொடக்கம் 20-10-68 வரை

கைத்தறி காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளும்

டெக்கா நூல் சேலைகளும்

மலிவான விலைகளில் விற்கப்படும்.

124, கே. கே. எஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

## தமிழ் மாணவர்களுக்கு

# சர்வகலாசாலைக்கும் சிங்களத் தேர்ச்சியா?

# பல்கலைக்கழக விவகாரம் பற்றி சபையில் நவம்

**விடுதலைக் கருத்து**

## புதிய முறையில் சிங்களக் குடியேற்றம்

**திருமலை — தமிழ் மக்களின் தாயகம் — தமிழரின் தலைநகர் — பறி போகின்றது.**

தமிழ்த் தலைவர்கள் என்று இனனமும் சொல்லிக் கொண்டு வீறுப்புப் பேசித் திரிபவர்கள், திருமலையைக் கைகழுவி விடத்தயாராகி விட்டார்கள்.

தமிழினம் இதைப்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. திருமலை போனபின்னும் இங்கு தமிழினம் வாழத்தான் வேண்டுமா?

திருமலைத் துறைமுகத்தை தேசிய மயமாக்கியபோது "முழு மூச்சுடன் எதிர்ப்போம்" என்று முழங்கியவர்கள், திருக்கோணேசராலயப்பகுதியை புனித இடமாகப் பிரகடனப் படுத்த நீங்கள் யார்? என்று பிரதமர் கேட்டதும் ரோஷம் காட்டி வெளியேறுவதாக நடித்தவர்கள், இப்பொழுது, "திருமலையில் தமிழ்ப்பல்கலைக்கழகம் அமைப்பதற்கு பிரதமரும், கல்வி அமைச்சரும் சம்மதம் அளித்து அங்கு சிங்களமும் போதிக்கப்படும்" என்று கூசாமல் சொல்லுகிறார்கள்.

திருமலையில் தமிழ்ப்பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென எதற்காக, எந்த நோக்கத்துக்காக தமிழ்மக்கள் பணம் கொடுத்தார்களோ, உழைப்புச் சக்தியை அளித்தார்களோ, அந்த அடிப்படை நோக்கத்தையே தமிழரசார் பாழாக்கி விட்டனர். இந் நிலையிலே திருமலையில் பல்கலைக்கழகம் வருகிறது என்று வைத்துக் கொண்டால் அது தமிழரசாரின் முயற்சியால் அல்ல. திருமலையைச் சிங்கள மயமாக்கும் ஆட்சியாளரின், தீவிரவாதிகளின் முயற்சியால் தான் அது ஏற்படுகிறது. அவர்களுக்கு இது பெரு வெற்றி. தமிழரசாருக்கு—தமிழ் இனத்துக்கு படுதோல்வி மட்டுமல்ல பெரும் அவமானம் அழிவின் ஆப்பு!

திருமலைப் பல்கலைக் கழகத்தில் சிங்களமும் போதனா மொழியானால் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும். சிங்கள மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், பணியாளர்கள் இன்னோரன்ன பிற ஆயிரக்கணக்கில் திருமலையில் குடியேறும். இப்பொழுதே அங்கு ஆர். ஜி. போட்டியிட தயாராகிவிட்டார். அடுத்து தமிழ் வாக்காளர்களென்ன தமிழ் மக்களே அங்கு இருப்பார்களா?

இதற்குத் தமிழினம் கைகட்டி வாய் பொத்தி நிற்கப்போகின்றதா? புனித மண்ணை, தாயகத்தை, திருமலையை விடுதலை செய்யத் துடித்து எழப் போகிறதா?

**அண்மையில் சர்வகலாசாலை சேர்வுக்குத் தகைமையுடைய மாணவர்களிடம் எந்தெந்தக் கல்விக்கு போக விரும்புகிறீர் என மனுச் செய்யுமாறு கோரப்பட்டிருந்ததற்கமைய தமிழ் மாணவர்களும் பல துறைகளுக்கும் விண்ணப்பம் செய்திருந்தனர். இவர்களைப் பொறுத்த மட்டில் பேராதனையும், கொழும்புமே இவர்களுக்கு உரியன, ஏனெனில் இவ்விரு கலாசாலைகளும் தான் பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி போதிக்கக் கூடியனவாக இருக்கின்றது.**

இந்த நிலையில் தாவர-விலங்கியல் விஞ்ஞானத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மாணவர்கள் இவ்விரு சர்வகலாசாலைகளிலும் சேர விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இவர்களுக்குக் கிடைத்த பதிலோ ஏமாற்றம்!

சர்வகலாசாலைப் புகுமுக மத்திய குழுவின் செயலாளரிடமிருந்து இம்மாணவர்களுக்குக் கிடைத்துள்ள கடிதத்தில்' மேற்படி கல்வி பயில்வதற்கு வித்தியாலங்கார விஸ்வ வித்தியாலயத்தில்த் தான் சில காலி இடங்கள் இருப்பதெனவும் இந்த வகுப்புக்களில் நூற்றுக்கு 75 வீதம் சிங்களமாகவும், எஞ்சியவை ஆங்கிலமாக இருக்குமெனவும், உயாதர க. பொ. த. பரீட்சையில் சிங்களம் அல்லாத பாஷையில் தேர்ந்தவர்களும் இவ்வகுப்புகளுக்கு சேர்க்கக் கூடும், ஆனால் சர்வகலாசாலையில் சேருமுன் க. பொ. த. ப. சாதாரண தரத்தில் சிங்களத்தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமெனவும் இந்நிபந்தனைக்கமைய சேரவிரும்பின் 23-9-1968க்கு முன் கிடைக்குமாறு பதில் அனுப்ப வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது ஆனால் இதே நேரத்தில், சிங்களத்தில் இரண்டு வருடடிப்ளோமா வகுப்பில் விஞ்ஞானம் படிக்கும் மாணவர்கள் ஏறக்குறைய 110 பேர் பேராதனை கொழும்பு சர்வகலாசாலைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர் என அறியப்படுகிறது. வித்தியாலங்கார விஸ்வவித்தியாலயத்தில் சேர்க்கப்பட வேண்டிய இந்த சிங்கள மாணவர்களை கொழும்பு, பேராதனையில்சேர்த்துவிட்டு தமிழ் போதனா மொழியாகக் கொண்ட 45 மாணவர்களுக்குமேல் வித்தியாலங்காராவில் சேரும்படி நிற்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் பற்றி 24ம் திகதி பிரதிநிதிகள்சபையில் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம் அவர்கள்பிரச்சனைகிளப்பியபோது கல்வி அமைச்சர் அவர்கள் தனக்கு இதுபற்றி ஒன்றும் தெரியாதுஎனவும் இதுபற்றி உடன்விசாரணைசெய்வதெனவும் உறுதியளித்திருந்தார்.

இந்த நேரத்தில் இது விடயத்தை ஆமோதித்துப்பேசுவதற்குக்கூட ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் இருக்கவில்லை. எமது நலனுக்கென அனுப்பிவைக்கப்பட்ட பிரதிநிதிகள் எமக்கு ஏற்படும் அநீதிகளைக் கூட கேட்க முடியாத நிலையில் நாக்குறு பட்டு இருப்பதைக் கண்டுவேதனையடையாமல் இருக்க முடியாது.

இது மட்டுமல்ல தமிழ் மாணவர்களது நலன்களுக்காக தேசீய உயர் கல்விச் சபையில் ஒரு உறுப்பினராக முன்னாள் சுப்றிம் கோட் நீதிபதி திரு சின்னத்தம்பி அவர்கள் முன்னாள் அமைச்சர் கௌரவ திருச்செல்வம் அவர்களின் சிபார்சிடன்தெரிவு செய்யப்பட்டிக்கிறார் மேற்படி கடிதம் அனுப்புவதற்கு இவரும் உடந்தையாக உள்ளார் எனக் கருத இடமுண்டு.

உயர் பதவி களிலிருந்து இளைப்பாறிய வர்கள் புதிய பதவிகளைப் பெறுவதற்கு தற்போதைய தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடம் புகளிடமளிக்கும் ஸ்தாபனமாக மாறியதால் தான் இந்த இழி நிலைகள் ஏற்பட இடமிருக்கின்றது என்பது தெளிவாகின்றது. எனவே கடமையுணர்ச்சி யற்றவர்கள், செயல் பட இயலாதவர்கள் ஒதுங்கியிருப்பதே தமிழினத்திற்குச் செய்யும் தொண்டாகும்.

**வாசகர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும்**

பேரன்புடையீர்!

எமது விடுதலை புதிய உருவிலும் புதிய பதிப்பிலும் உணர்வூட்டும் புதிய கருத்துக்களுடனும் கவிதைகட்டுரைகளுடனும் உண்மைச் செய்திகளுடனும் தமிழினம் வாழ்ந்திட எது இனி வழிவகையோ அதனையே தன் இதயக் குரலாய்க் கொண்டுவெளிவருகிறது. இதில்தொடர்ந்தும் உங்கள் நல்லாதரவை வேண்டுகிறோம்.

புதிதாகச் சேரவிருக்கும் விற்பனையாளர் களையும் சந்தாதாரர்களையும் எமது புதிய முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நிர்வாகி.

முகவரி:-
'விடுதலை'
103, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## ஈழத் தமிழ் இன விடுதலை முழக்கம்

# திருமலை இந்துக்களின் உரோமாபுரி

## அதை - எதிர்நோக்கும் ஆபத்தை தடுப்பது நம் கடமை

- ஈழவேந்தன் -

பேராயிரம் உடையவன் எம் பெருமான் அப் பெருமான் கொலு வீற்றிருக்கும் கோணமலைக்கும் பல பெயர்கள் உண்டு. திரிகோணமலை திருக்குன்றமலை, திருக்கோணமலை, திருக்கோணதமலை, திருக்கொணமலை, கோணமலை, கோணமலை கோணமாமலை, மச்சேந்திர பர்வதம், மச்சேஸ்வரம் தெக்கணகைலாசம், தென்கைலாசம், திருமலை ஆகிய பெயர்கள் அவற்றுள் சில. இப்பெயர்கள் அனைத்தையும் துருவி ஆராயும் போது அவை அனைத்தும் செந்தமிழ் சிவநெறி தொடர்புள்ளனவாகவே இருப்பதை உணரலாம். வேறு சொற்களில் விளம்பின் ஈழத்தின் பெரும்பான்மை இனத்தவர் தம் இன அடிப்படையிலேயோ, தம் மொழி அடிப்படையிலேயோ, தம் மத அடிப்படையிலேயோ இத் திருமலை தமக்கு உரியதென்று உரிமை பாராட்டுதற்கு அருகதையற்றவர்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகிறது

வடக்கினை, கிழக்கினை இணைத்து வரலாற்றுப் பெருமையோடு சமய முதன்மையும் பெற்று விளங்கும் இத் திருமலை உலகிலுள்ள மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றையும் தன்னுள் அடங்கித் திகழ்கிறது. திருமலையைச் சுற்றியுள்ள கடல் வளத்தினை 'குரை கடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலையென' தமிழ் ஞானசம்பந்தர் தகைசான்ற முறையில் கூறிப் போந்தார். இங்கு தான் எமக்கு அருளினை அள்ளி வழங்கும் அருள் நேசனாகிய கோணேசனும் கொலு வீற்றிருக்கிறான். ஆழி சூழ் ஈழத்தின் வடகீழ் கரையிலுள்ள திருகோணமலை தமிழர்கள் குடியேறிய முதன்மையான இடங்களில் ஒன்றாகும். இதையொட்டிய விரிவை பிரித்தானிய கலைக்களஞ்சிய (Encyclopaedia Brittanica) தொகுதி 22ல் பக்கம் 477ல் கண்டு பயன் பெறுக.

### நெருங்கி வாழ்ந்த தமிழ்க் குடிகள்

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் 'குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமலை' என்று கூறிய கூற்று தமிழ்க் குடிகள் அன்று மிகப் பலர் வாழ்ந்தனர் என்ற உண்மையை உணர்த்தி நிற்கிறது. இன்று, அன்று நெருக்கமாய் வாழ்ந்த தமிழ்க்குடி வேற்று இனத்தவரால் நெருக்கப்பட்டு அல்லல் உறும் நிலையினைக் காண்கிறோம்.

### ஈழத்தில் முதல் நிலவிய சமயம் சைவம்

ஈழத்தில் குறிப்பாகத் திருகோணமலையில சிவநெறி தழுவி நின்ற செந்தமிழ் மக்கள் வாழ்ந்தனர் என்ற உண்மையை வணக்கத்திற்குரிய வல்பொல இராகுல என்பவர் எழுதிய 'இலங்கையில் பௌத்த வரலாறு' (பக்கம் 44) என்னும் நூலின் வாயிலாக அறியலாம். கி மு. ஐந்தாம் நூற்றாண்டில் சிங்களவரின் முன்னோர் என்று கருதப்படும் விசயன் வருவதற்கு முன்பே இங்கு சைவம் தழைத்தோங்கியிருந்த தென்பதற்குரிய சான்றுகளை அந்நூல் தருகிறது.

### திருமலை - இந்துக்களின் உரோமாபுரி

இனி கத்தோலிக்க மத பீடத்தில் முதன்மை பெற்றவர்களுள் ஒருவராகிய தூய (பரிசுத்த) பிரான்சிஸ் சவேரியார் தரும் கருத்து இதோ. திருகோணமலையை நேரில் பார்வையிட்ட இவர் 'கீழத் தேய மிலேச்சர்களின் உரோமாபுரி' (The Rome of the heathens of the East) என திருகோணமலையைக் குறித்துள்ளார். இதன் விரிவு 'இலங்கையில் கத்தோலிக்க மதம் வளர்ந்த வரலாறு' (History of the Catholic Church in Ceylon Vol. 1 by Father Ganapragasam) என்ற நூலில் இருந்து அறிய முடிகிறது. இதில் எம்மை அவர்கள் 'மிலேச்சர்' என்று அழைத்திருப்பினும் உலகின் பல பாகங்களில் இருந்து வந்த இந்துக்கள் திருகோணமலையில் எழுந்தருளியிருக்கும் கோணேசரை வழிபட்டனர் என்ற பேருண்மையை எடுத்துக் கூறியதற்கு நன்றி காட்டுவோமாக. கத்தோலிக்கருக்கு உரோம் எப்படியோ அப்படியே இந்துக்களுக்கு திருகோணமலை என்று மொழிந்த மொழி மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது.

### வரலாற்று உணர்ச்சி உரிமைக்கு வித்து

இவ்விதம் விரிவாகத் திருமலையின் வரலாற்றை யாம் ஆராய்ந்ததற்குக் காரணம் தமிழர்கள் தம் உரிமைக்காகப் போராடுகின்றபோது தமது வளமிக்க வரலாற்றை அறிந்திருக்கவேண்டும். வரலாற்று உணர்ச்சியுமற்று உரிமை வேட்கையுமின்றி 'ஏனோ தானோ' என்று வாழ்வதினால் தான் இன்று சிவநெறி தழுவி நிற்கும் செந்தமிழர் இந்தச் சீர் அழிந்த நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

### குடிசன மதிப்பு இடித்துரைக்கும் ஆபத்து

வந்தோரை வாழவைக்கும் பண்பு வண்டமிழரோடு கூடப் பிறந்த பண்பு. இது வரவேற்கத்தக்க பண்பும் கூட ஆனால் எதற்கும் ஓர் எல்லை உண்டு - ஓர் வரம்பு உண்டு என்றபடி வந்தவர்கள் வாழ்வினில் உயர்ந்தபின் எம் வாழ்வினை ஒழிக்கும் அளவிற்கு இடம் கொடுத்தல் மடமை. தன் கூடாரத்தில் தங்குவதற்கு ஒட்டகத்திற்கு இடம் கொடுத்த அரேபியனின் கதை எல்லை மீறிய எம் பரந்த நோக்கிற்கு எச்சரிக்கையாக அமையட்டும். திருமலை குடிமக்கள் மதிப்பைக் காலக் கண் கொண்டு பார்க்கும் போது 1834ம் ஆண்டு 250 என மிகச் சிறிய எண்ணிக்கையுள்ள புத்த மதத்தவர் 1953ல் 14,082 ஆக பெருகியுள்ளனர். இன்று 1964ல் அவர்களின் எண்ணிக்கையை எண்ண எம் உள்ளத்தில் ஏக்கம் ஏற்படுகிறது

[4-ம் பக்கம் பார்க்க]

## தானுயர்வு பெறுவதெனில் தாள் பிடித்து நிற்பான்.

பிச்சை யுணவொன்றே பெரி
    தென்பான் வயிறுடையான்!
எச்சில் வருமெனினுந் தமிழ்
    இனத்தை விலை வைப்பான்!
நச்சு மகன் குடி கேடன்
    நன்றியிலாப் பாவி...... ....
உச்சி மீதுந்துவீர்! இவன்
    ஒழிந்தால் விடிவுண்டே!

தீனி முதலென்பான் வயி
    றுடையான்! இவன் தோழன்
ஈன மகன் தன்னலத்தான்
    இனத்தை மதிப்பானோ?
தானுயர்வு பெறுவதெனில்
    தாள் பிடித்து நிற்பான்!
மானம் விலை வைப்பான்! இவன்
    மனைவியையும் விற்பான்!

இழிவுடையான் தன்னலத்தான்
    எதுவரினும் அஞ்சான்!
அழிவு தமிழின மடைய
    அத்தனையுஞ் செய்வான்
மொழியினிலு மழகு தமிழ்
    மொழி மறந்த கொடியன்
குழி நெருப்பில் இவனுடலம்
    கொடுத்து வெறி கொள்வீர்!

(காசி - ஆனந்தன்)

## தமிழரசாரின் ஒன்றுக்கொன்று முரணான தீர்மானங்களும் தகிடுதத்தங்களும்

**தமிழினத்தின் தலைவர்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டு தமிழ மக்களுக்கும் தமிழ் மொழிக்கும், தமிழர் பிரதேசங்கட்கும் புதை குழிதோண்டி இன ஒழிப்பு நடவடிக்கைகளைக் கையாண்ட தேசிய அரசின் இன ஒழிப்புத் திட்டத்தை தமிழினத்தின் சார்பில் தனிக் குரல் எழுப்பி அநீதிகளைச் சுட்டிக் காட்டிய காவலூர் பிரதிநிதி திரு. வ நவரெத்தினம் அவர்கள் தேசிய அரசிற்கு இடையூறு விளைவித்ததென்ற குற்றச் சாட்டின் பேரில் தமிழரசுக் கட்சியிலிருந்து விலத்தப் பட்டார்.**

தமிழினம் தனிநாடு கோருவைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்து தனி நாட்டுக் கோரிக்கையிலேயே தமிழினம் போராடி உரிமைபெற வேண்டுமென்ற உண்மையை மக்களுக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து தமிழரசுவாலிப முன்னணியும் அதன் 17-7-68-ம் திகதி செயற்குழுவில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதன் 30 8 68-ம் திகதி பொதுச் சபையிலும் இதை ஊர்ஜிதம் செய்தது. இச் செய்தி ''விடுதலை'' யில் மட்டுமல்ல சகல தினசரிப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

இத் தீர்மானத்துக்கு தமிழரசுக் கட்சியின் பொது ச் செயலாளா திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் மறுப்புத் தெரிவித்ததும் அவரது மிரட்டலுக்கு அடங்கிய வாலிப முன்னணிச் செயலாளர் அப்படித் தீர்மானம் நிறைவேற்ற வில்லையென அவருக்கு ஒத்தாசையாக மூடி மறைத்ததையும் பத்திரிகை வாசகர்கள் அறிவார்கள்.

அப்படி ஒரு தீர்மானம் இல்லையென மறுத்த இவர்களே, தமிழரசுக் கட்சியின் 14-9 68 பொதுச்சபையில் வாலிப முன்னணியினர் நிறைவேற்றிய தனித்தமிழ் நாட்டுத் தீர்மானத்தை நிராகரிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது இதை தமிழ் மக்கள் யாவரும் அறிந்திருப்பர் நிறைவேற்றப் படாத தீர்மானத்திற்கு மீண்டும் ஏன் நிராகரிப்புத் தீர்மானம்? தளபதியாரும், குட்டிப் பையன்களும், இப்படியான ஏமாற்றுவித்தைகளை தமிழ் மக்களுக்கு இனிமேலும் காட்டக் கூடாதென இவர்களை கேட்டுக் கொள்கின்றோம்.

## வில்கல் நாடகம் பலனளிக்கவில்லை

கிளிநொச்சி பட்டினசபையின் மூன்று வட்டாரங்களில் நடைபெற்ற இடைத்தேர்தலில் தமிழரசுக்கட்சி மண் கவ்வியது தமிழ் காங்கிரஸ் மூன்று ஸ்தானங்களையும் கைப்பற்றியுள்ளது. இது பற்றி தமிழரசு அனுதாபி ஒருவர் கருத்து தெரிவிக்கையில் தமிழரசுக் கட்சி பொன்னம்பலம் கொள்கையையே இன்று நடத்துகின்றது. பொன்னம்பலத்தின் கொள்கையை அமுல் நடாத்த பொன்னம்பலமே சிறந்தவர். ஆகவே பொன்னம்பலம் கட்சியான காங்கிரசையே ஆதரிக்க வேண்டுமென பொதுமக்கள் முடிவு செய்தால் அதற்கு காரணம் தமிழரசுக் கட்சியினரே என்றார்.

## விடுதலை

தம்பி! உள்ள உயிர் ஒன்றுதான். அது போகப் போவதும் ஒரு தடவை தான். அது விடுதலைப் பணிக்குப் போவதிலே தான் நான் பெருமைப் படுகின்றேன்.

—அறிஞர் அண்ணா

## ஆசிரியருக்குக் கடிதம்


# புலம்பல் தீர்க்கதரிசி யார்? தீர்க்கதரிசி யார்?

தமிழரசுக் கட்சியையும் திரு. வ. நவரத்தினத்தையும் ஒன்றுசேர்க்க வேண்டுமென்ற பலதரப்பட்ட கருத்துக்கள் சில தினங்களாக தினசரிப்பத்திரிகைகளில் அடிபடத் தொடங்கி விட்டன. தமிழினத்தின் நலன் கருதி இவ்விரு சாராரையும் ஒன்று சேர்க்க வேண்டுமென யாராவது முயற்சி எடுப்பாராயின் அவர்கள் முதலில் அறிந்திருக்க வேண்டியன பல.

(1) இருசாராரும் எந்தக் கொள்கையில் ஒன்று படுவது. யாருடன் யார் சேர்வது! யாரை யார் சேர்ப்பது! யார் குற்றவாளி? யார் சுற்றவாளி? இனிமேல் யாருடைய தலைமையில் இயங்குவது, எக்கொள்கையை முன் வைத்து உரிமைப் போராட்டம் நடாத்துவது என்பனவற்றில் எல்லாம் தெளிவு ஏற்படச் செய்ய வேண்டும்.

(2) இலங்கைவாழ் தமிழ் பேசும் இனத்தின்நல்வாழ்வு கருதி தமிழரசுக்கட்சி இயங்க வேண்டுமானால் திரு.வ. நவரெத்தினத்துடன் கொள்கை ஒப்பந்தம், தேர்தல் ஒப்பந்தம், போராட்ட ஒப்பந்தம் அத்தனையும் செய்தே தீர வேண்டும்.

இதை விட்டு தமிழரசுக் கட்சி தனது குற்றத்தைமூடி மறைக்க திரு.வ நவரெத்தினத்தை குற்றவாளியாக்க முனைந்து, கொள்கையற்ற அரசியல் வேட்டையாட முனையுமாயின், தமிழரசுக் கட்சிக்கு "சுயநலம்கள்" என்ற பட்டத்தை சூட்டி இவர்களை அரசியல் வானிலிருந்து விரட்டியடிக்க தமிழ் மககள் தயங்கமாட்டார்கள்.



தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி சேரும் பொழுதே மந்திரிபதவியை நாம் ஏற்கக் கூடாது நிபந்தனையற்ற ஒத்துழைப்பைக்கொடுத்து எமது உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருப்போம் என திரு வ. நவரெத்தினம் அவர்கள் கருத்துத் தெரிவித்தார். ஆனால் அதைத் தலைமைப் பீடம் அன்று ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தும் கட்சியின் பெரும்பான்மை முடிவை "நவம்" அவர்கள் ஏற்று நடந்தார். இதைதொடர்ந்து கட்சியின் ஒப்பந்தத்தை மீறி தமிழினத்திற்குப் பாதகமாக அரசாங்கம் நடக்க

[4-ம் பக்கம் பார்க்க]

# தமிழினமே! நின்நிலையுணர்ந்து விழித்தெழுக!

இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் காலத்துக்கு காலம் படிப்படிப்பாக குறைக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வருகின்ற இவ்வேளையில் ஏனோ தானோ என்றிராமல் எம் இனத்தின் வளர்ச்சிக்காகவும், உரிமைகளுக்காவும் ஒவ்வொரு தமிழ் மகனும் பாடுபட திடசங்கற்பம் கொள்ள வேண்டியவர்களாகின்றோம்.

எனவே தமிழ் இனம் இனிமேலும் உரிமைகளை பெற்றுத்தரும் பொறுப்பை முழுக்க முழுக்க அரசியல் வாதிகளிடமே ஒப்படைக்காது உரிமைகளை பெற்றுக் கொள்ளும் போராட்டத்தில் நம் பங்கையும் செலுத்த விழிப்புடன் இருக்க வேண்டுமென "விடுதலை" வேண்டிக் கொள்ளுகிறது.

**தமிழ் அரசாங்க ஊழியர்களே!**

நெஞ்சம் குமுறும் நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை உணருகிறோம். உங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளும் காட்டப்படும் பாரபட்ச நடவடிக்கைகளும் எங்களுக்குத் தெரியும் எனினும் தொடந்து தமிழ் மக்களுக்கும், மொழிக்கும், நாட்டிற்கும் உண்மையான சேவையாற்றி வருக என வேண்டுகின்றோம். எந்த ஒரு தமிழ் மகனுக்கும் நன்மையோ திமையோ செய்வதாக இருந்தாலும் அது தனக்கே செய்வதாக உணரவேண்டும். அரசாங்கம் எவ்வளவு தூரம் உங்களை நசுக்கினாலும் இனத்தின் நன்மை கருதி மனந்தளராமல் எதிர்காலத்தை மனதிலிருத்தி தொடர்ந்தும் சேவையாற்ற வாரீர், வாரீர் என "விடுதலை" அழைக்கின்றது.

**ஆசிரியர்கள் சமுதாயமே!**

எதிர்கால தமிழினத்தின் நல் வாழ்வும், வீரமிக்க உணர்ச்சியுள்ள, இனம், மொழி, நாட்டுப் பற்றுள்ள தமிழர் சமுதாயத்தை உருவாக்குகின்ற பொறுப்பும் திறமையும் ஆசிரியர்களான உங்களிடமே தங்கியுள்ளது. இக் கடமையை உணர்ந்து உங்கள் சக்திக்கு இயன்றவரை கடமையாற்ற, தொண்டாற்ற முன்வருமாறு கோரி ஆசிரியர் சமுதாயமே விழித்தெழுக! பணிபுரிக! என "விடுதலை" வேண்டுகின்றது!.

**மாணவ சமுதாயமே!**

எம் சமுதாயத்தின் விடுதலை வீரர்களாகவும், தியாகிகளாகவும், தலைவர்களாகவும் இனத்தை காத்து விடுதலை பெற்ற சுதந்திர இனமாக வாழவைக்க வேண்டியவர்கள் நீங்கள் என்பதை மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். தமிழர்களின் இலக்கியங்களை, சரித்திரங்களை வீரவரலாறுகளை, பிற நாட்டு அரசியல், சுதந்திர போராட்டகளை நீவீர் ஊன்றிப் படித்து தன்மானமுள்ள வீர சமுதாயமாக மிளிர வேண்டும். அது மட்டுமல்ல, விளையாட்டு துறையிலும் சில விசேட பயிற்சிகளை கற்று உடல் உறுதியும், மன உறுதியும் ஒழுக்கமும் வீரமும், விவேகமும் கொண்டவர்களாக வளர வேண்டுமென "விடுதலை" வேண்டிக் கொள்கிறது.

**செல்வந்தர்களே! தொழிலதிபர்களே! வர்த்தகர்களே!**

உங்கள் சுக வாழ்வுக்காக மட்டும் செயல்ப்படாது தமிழ் இனத்தின் நன்மையை கருத்தில் கொண்டு உங்கள் முதலீடுகளில் பெரும் பகுதிகளை தமிழ் பிரதேசங்களிலேயே முதலீடு செய்யுங்கள். தொழிற் சாலைகளையோ வர்த்தக ஸ்தாபனங்களையோ நீங்கள் தமிழ்ப் பிரதேங்களில் நிறுவினால் எம் இனத்தின் வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்படுவதுடன் மட்டுமல்லாமல் எம் பிரதேசத்தின் பொருளாதாரத்தை விருத்தி செய்ததாகவும் அமையும். எனவே இனிமேலாவது சிந்தியுங்கள். செயலாற்றுங்கள் விடுதலைப் போராட்டத்தில் உங்கள் பங்கினை இதன் மூலம் செயல்படுத்துங்கள் என "விடுதலை" உங்களை பணிவாக வேண்டுகின்றது.

**கலைஞர்களே!**

தமிழ்க் கலை, கலாச் சாரங்களை நாமே கட்டிக் காக்க வேண்டும். எமது மொழி, பண்பாடு கலாச்சாரம் வளர கலைஞர்கள் ஒத்த கருத்துடன் செயல்ப் படவேண்டும். இன்றைய கலை உலகில், எமது பண்டைய கலாச் சாரங்கள், சிதைவடைகின்றன இவற்றைச் சிதைவடையச் செய்தால் நாமும் எம் இனத்திற்கு துரோகிகளாக நேரிடும், எந்த ஒரு கலைஞனது எழுத்தாணியும் தமிழின் வளர்ச்சிக்கும் கலை கலைச் சாரங்களுக்கும் ஊன்று கோலாக அமைய வேண்டும்.

எனவே தமிழ் மக்களை சுதந்திர உணர்ச்சி கொண்டவர்களாக்க கலைஞர்களாகிய நீங்கள் உங்கள் பங்கினைச் செய்யுங்கள் என கலைத் தேவியின் பேரால் கேட்கிறது "விடுதலை"

# தமிழரசுக்கட்சி இன்னும் செல்வாக்கிழக்கவில்லை என்கிறார் மசூர் மௌலானா

**அறிஞர் அண்ணாவுக்கு விழா எடுப்பதென்றால் அது தமிழுக்கு, அறிவிற்கு, வீரத்திற்கு விழா எடுப்பதாக அமையும். தமிழரின் பெருமையை, தமிழின் பெருமையை போற்றி மகிழ்கின்ற எந்தத் தமிழனும் அண்ணாவை மனதில் கொள்ளாமல் இருக்க முடியாது. இதே உணர்வும் பற்றும்தான் இலங்கைத் தமிழர்களாகிய எங்களையும் அண்ணாவுக்கு மணி விழா எடுக்கத் தூண்டியது.**

இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை கதிரேசன்வீதியில் நடைபெற்ற அறிஞர் அண்ணாவின் மணி விழாவில் தலைமை தாங்கிப்பேசிய இ.தி.மு. கழகத்தை சேர்ந்த திரு. மணவைத்தம்பி அவர்கள் குறிப்பிட்டார்.

இவர் தொடர்ந்து பேசுகையில் தமிழர்களாகிய நாம் தமிழக அறிஞர்களைப் பற்றிப் பேசினால் இங்குள்ள அரசியல் வாதிகள் சிலருக்கு வயிற்றுவலி ஏற்படுகின்றது. ஆனால் இலங்கை மக்களிடத்து எதுவித தொடர்புமற்ற வெளிநாட்டு அரசியல் வாதிகளது கைக்கூலிகளாக, தரகர்களாக, மாசேதுங்கிற்கோ, குருஷேவிற்கோ வக்காலத்து வாங்குபவர்களாக பலதரப்பட்ட அரசியல் தரகர்கள் இங்கு தாளம் போடுவதை கண்டு இவர்களுக்கு வயிற்றுவலியோ, பயமோ ஏற்படுவதில்லை இனத்தால், மொழியால், கலாசாரத்தால் ஒன்றுபட்ட நாங்கள் எங்கள் பெருமைகளைப் பேசுவதைக்கண்டு பயப்படுகிறார்கள்சிலர். நாங்கள் எங்கள் அறிஞர் பெருமக்களது கருத்தைக் கூறுகின்றோமே தவிர எங்கள் நாடான - இலங்கைக்குமாறாக இந்தியாவுக்கு பரிந்து பேசவுமில்லை நாட்டைப் பிடித்துக் கொடுக்கப் போவதுமில்லை எனபதைவலியுறுத்த விரும்புகின்றோம்.

இதைத் தொடர்ந்து திரு மசூர் மௌலானா அவர்கள் உரையாற்றுகையில் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்படும் முன்னரே அண்ணாவின் பகுத்தறிவுக் கருத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் நாங்கள். இக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சியினரும் பேசவிருக்கின்றனர் என்றதும் தமிழரசுக்கட்சியும் இ. தி. மு. கழகமும் சேர்ந்து இன்றைய நிலையில் ஏதோ அரசியல்க் கூட்டம் நடத்தப் போகின்றது என்று சிலர் கருதினால் அது தவறு. இது எங்கள் அரசியல் கூட்டமல்ல. தமிழரசுக் கட்சிக்கு கொழும்பில் கூட்டம் நடாத்த இ. தி. மு. கழகம் மேடை அமைத்துக் கொடுக்கும் நிலைக்கு இன்னும் தமிழரசுக் கட்சி ஆளாகவில்லை என்றார் அவர். இக் கூட்டத்தில் கலந்து கொள்வதாக இருந்த தமிழரசுப் பிரமுகர்கள் கூட்டத்திற்கு சமுகம் கொடுக்காததையிட்டு கவலை தெரிவிக்கப் பட்டது. மற்றும் பலர் பேசினர்.

வரும்முன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

அதி. 44 — குற்றம் கடிதல்

# ஜி.ஜி.யின் உழுத்துப்போன அரசியல் வாதம்
## தமிழ் மக்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது

**தமிழினத்தின் உரிமைக்காக என்ருல் இயன்ற வரை பாடுபடுவேன் என்று மேடை மேடையாக சங்கநாதம் செய்து வந்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக அரசாங்கத்தில் இருந்து தமிழினத்திற்காக சாதித்தது என்ன என்று தமிழினம் அறிய விரும்புகின்றது. படிப்படியாகத் தமிழினத்தின் மீது இந்த ஆட்சியாளரால் எடுக்கப்பட்ட சதி நடவடிக்கைகள் எதையும் தட்டிக் கேட்கவோ தடுத்து நிறுத்தவோ முயற்சி எடுத்ததாகக் கூற முடியுமா?**

தமிழ் மக்களுக்காக தமிழரசுக் கட்சி எதைச் செய்கின்றதோ அதை எதிர்ப்பதும், சதி செய்வதும் மேடை மேடையாக தமிழரசுக் கட்சியைத் திட்டித்திரிவதும்தான் அரசியல் என்று திரு பொன்னம்பலம் அவர்கள் கருதுவார்களாயின் அவர் மீண்டும் தமிழ் இனத்தால் விரட்டப்படுவதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

தமிழினம் தனித் தன்மையுடனும், தன்மானத்துடனும், தன்னைத்தான் ஆளும் உரிமையுடனும் வாழ வேண்டுமென்ற விருப்பத்தால் தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய ஒரு சமஷ்டி அரசியல் கொள்கையில் அரசியல் இயக்கத்தை நடத்தியது தமிழரசுக் கட்சி. ஆனால் அதுவும் காலம் கடந்து விட்டது. தனது கட்சிக்கு அடிப்படைக் கொள்கை எதுவுமின்றி சந்தர்ப்பத்திற்கேற்ப அரசியல் வேட்டையாடும் திரு. பொன்னம்பலம் அவர்கள் தனது பழிவாங்கும் அரசியல் கொள்கையையும், சுயநலக் கொள்கையையும் முன்வைத்து அரசியல் வேட்டையாடுவதை உடன் நிறுத்த வேண்டும்.

தமிழன் பிரதேசம் பறிபோகின்றதே! இந்த நடவடிக்கைகளையாவது தட்டிக் கேட்க எத்தனித்தாரா? தமிழ் மக்களது உரிமைப் பிரச்சனைகளில் எல்லாம் இவர் மௌனம் சாதிப்பது ஏன்? அரசாங்கத்திற்கு நல்லபிள்ளையாக நடிக்கவா அல்லது தமிழரசுக் கட்சி அழிய வேண்டுமென்பதற்காகவா?

தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடவேண்டுமென்று ஓலமிடுகின்ற திரு. பொன்னம்பலம் அவர்கள் தமிழினத்திற்கு அதி முக்கியமான சில வேலைத் திட்டங்களை முன்வைத்து அதற்கு ஒத்துழைப்புத் தருமாறு ஏன் கேட்கக்கூடாது. இதை விட்டு தமிழரசுக் கட்சி தனது சமஷ்டிக் கொள்கையைஉதறித்தள்ள வேண்டும். அதன் பின்னரே பொது வேலைத் திட்டமொன்றில் ஒன்றுபட்டுழைப்போம் என்று திரு பொன்னம்பலம் கூறுவது அர்த்தமற்ற கேலிக் கூத்தான கோரிக்கையாகும்.

ஒத்துழைப்பதற்கும் சமஷ்டிக் கொள்கைக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? சிங்கள அரசியல்வாதிகள் கேட்பதற்கும் இவர் கேட்பதற்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. தனக்கென ஒரு தெளிவான கொள்கை இல்லாததற்காக மற்றவர்களையும் கொள்கையைக் கைவிடும்படி கோருவது - மிகவும் கீழ்த்தரமான அரசியல் நோக்கமாகும்-

எனவே இனிமேலும் தமிழினத்தை விலை கூறி விற்காது - எஞ்சிஇருக்கும் காலத்திலாவது தமிழர் நலன் கருதி ஒன்றுபட்டுழைக்குமாறு வேண்டும் இவ்வேளையில் உழுத்துப்போன தமிழரசு, காங்கிரசுக் கொள்கைகள் இனிமேலும் எமக்கு விமோசனம் அளிக்காது என்பதையும் - தமிழினத்தின் உரிமைகளைப் பெற்று தனித்துவத்துடன் வாழ புதியகுரலும் புதிய போராட்டமுமே எமக்கு வழிவகுக்கும் என்பதை ஆணித்தரமக வலியுறுத்த விரும்புகின்ரேம்.

## தீர்க்கதரிசி யார்?

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

முற்படும் போதெல்லாம் ''நவம்'' அவர்கள் அவற்றை சுட்டிக்காட்டிக் கொண்டே வந்திருந்தார். ஆனுல் நவம் அவர்களுடைய இச் செயல் ஒரு சிலருக்கு தலையிடியை கொடுத்தது. காரணம் கணவன் மனைவி உறவில் அவ்வளவு நெருக்கம ஏற்பட்டிருந்தமையே.

இதைத்தொடர்ந்து தமிழினத்தின் வாழ்வில் ஓரளவு கட்டிக் காத்துவந்த உரிமைகளிலும் அரசாங்கம் கைவைக்கத்தொடங்கியபோது நவம் அவர்கள் அதை எதிர்க்க தொடங்கியதும் (தமிழரசுத் தலைமைப்பீடமே ஒத்துழைப்புக் கொடுதது மட்டுமல்லாமல் தமிழினத்தைப் பாதிக்கக்கூடிய பல விடயங்களுக்கு ஆதரவும் கொடுக்கத் தொடங்கியதும் தெரிந்ததே.) இதனுல்சினம்கொண்ட தமிழரசினர் நவம் அவர்களை கட்சியிலிருந்து விலக்கினர். இதனுல் நவம் அவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்கட்சியில் அமர்ந்து தமிழினத்தின்சார்பில் தனிக்குரல் எழுப்பமுடிந்தது.

இன்று நடந்ததென்ன? நாடறியும், நாட்டு மக்கள் அறிவார்கள். யார் தீர்க்கதரிசி? திரு வ. நவரத்தினம் அவர்களா? சோரம் போன தமிழரசாரா? நவம் அவர்கள் தமிழ் மக்களுக்கு பாதகமான சரத்துகளுக்கு ஆதரவு கொடுக்காதுஎதிர்த்து வெளியேறினுர். ஆனுல் தமிழரசுக் கட்சியினரோ தமது சுய கௌரவத்தையும், பலத்தையும் இழந்து தமிழினத்திற்கு பாதகமான மசோதாக்களையும், சட்டங்களையும் ஆதரித்து ஒத்துழைப்புக் கொடுத்து உதைபடாத குறையுடன் வெளியேறினுர்கள். எனவே யார் யாருடன் சேர வேண்டும என்பதை மக்களே தீர்க்க வேண்டும்.

சி. பாலசிங்கம்

## சந்தர்ப்பவாதமா, தன்மான உணர்ச்சியா?

ஏற்கனவே பலமுறை செயற்குழுவில் ராசினுமாக்கடிதம் சமர்ப்பித்து நாடகமாடிய செனட்டர் ''திரு'' அவர்கள் இம்முறையும் அதே போல் தனது ராசினுமாக் கடிதத்தை சமர்ப்பித்தார். எதிர்பாராத விதமாக அதிகமானேர் அதை ஏற்றுக் கொள்ளவே ''திரு''வும் தளபதியும் வியப்பும், ஏமாற்றமும் அடைந்தனர் மந்திரி பதவிக்காக செனட்டராக்கப்பட்ட ''திரு'' அவர்கள் இன்னமும் தொடர்ந்து ஏன் செனட்டராக ஒட்டிக் கொண்டிருக்கின்றுர்.

தன்மானத்தை விற்கமுடியாதென்று வீர முழக்கம செய்யும் ''திரு' 'அவர்கள் பிரதம அமைச்சர் வாய்ப்பூட்டு போட்ட சமயங்களில் எல்லாம் ஏன் தன்மானத்தை விட்டுக் கொடுத்தார் பிரதம அமைச்சர் இல்லத்தில் யு - என் - பி பா-உ. திரு.சாளிஎதிரிசூரியா கன்னத்தில் அறைந்த போது தன்மானம் எங்கே மறைந்திருந்தது? எல்லாவற்றிலும் தன்மானத்தை இழந்துவிட்டு இன்று அவர்களே உதைத்துத் தள்ளும் நிலைக்கு வந்த பின்தான் ''திரு''வுக்கு தன்மானம் பிறந்ததா?

அடுத்த இதழில்......
சிங்கள அமுலும் தமிழ் அரசாங்க ஊழியர் நிலையும் பற்றிய விசேட கட்டுரை 15-10-68 இதழில் வெளி வரும்.

## தளபதியாரின் அர்த்தமற்ற மகிழ்ச்சி

தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாகப் பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் தள(ர்)பதி அமிர்தலிங்கம் அவர்கள் ''இன்றுதான் நான் வாழ்கையில் மகிழ்ச்சியடைகின்றேன்'' என்று கூறியிருந்தார். ஆனுல் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்தஅன்று இதே தள(ர்)பதியார்'' இன்றுதான் நாம் மகிழ்ச்சியடைகின்ரேம்'' என்று கூறியிருந்தார். இப்படி ஒன்றுக்கொன்று முரணுகப் பேசும் தள(ர்)பதியவர்களே நீங்கள் அடையும் மகிழ்ச்சி எதிலே தங்கியிருக்கின்றது என்று வினவுகிருர்கள் தமிழ் மக்கள். பதில் கூறுவீர்களா?

## புனிதநகராகப் பிரகடனம்செய்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

1834ல் இந்துக்களின் எண்ணிக்கை 14,182 1953ல் எம் எண்ணிக்கை 32,362 ஆகத்தான் பெருகியுள்ளது விகிதாசாரப்படி எமது பெருக்கம் போதாது. ஆனுல் 1964ல் எமது எண்ணிக்கையின் வளர்ச்சி தடைப்பட புத்த மதத்தினரின் எண்ணிக்கை மிகப் பெருகியுள்ளது. இந்நிலைக்கு காரணம் இரண்டு. ஒன்று எம் மரபுவழித் தாயகத்தைப் பறிக்கும் அரசாங்கத்தின் சதித் திட்டம். மற்றையது எமது தாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்ச்சி அற்ற நிலை எம்மிடை நிலவுவது.

### தீயோருக்கு வரலாறு தரும் செய்தி

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து ஈற்றில் மனிதனைக் கடிக்கும் வெறிநாய் போல எம் மொழியை அழித்து எம்மினத்தை அழிக்க முயலும் அரசாங்கம் இன்று எம் மதத்திலும் கை வைக்கத் தொடங்கி விட்டது போலும். 'கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' என்று சிலப்பதிகாரம் செப்பும் வேந்தன் ஒரு காலத்தில் கோணேசர் கோயிலை இடித்து அதில் புத்த கோயில் கட்டும் நோக்கோடு திருமலை நோக்கி வந்தான். ஆண்டவனின் ஆத்திரத்திற்கு ஆளான இவனின் கண்கள் கெட்டன. தன் தவறை உணர்ந்து கண்ணீர் விட்டுக் கலங்கிய கயவாகு முக்கண்ணனுகிய கோணேசன் அருளை வேண்டி நின்ருன். இரக்கத்தின் உருவான இறைவன் இவன் இறைஞ்சுதலை ஏற்று மீண்டும் இவன் தன் கண்களைப் பெறச் செய்தான். மீண்டும் இவன் கண்கள் தழைத்த இடம் இன்று கந்தளாய் என்று அழைக்கப்படுகிறது. இவன் தலைசிறந்த சிவபக்தனுக மாறினுன். கயவாகு வேந்தனின் வாழ்வில் ஏற்பட்ட இந்நிகழ்ச்சி கோணேசர் கோயிலுக்குத் தீங்கு விளைவிக்க விழையும் தீயோருக்கு நல்ல பாடமாக அமையட்டும்.

'தாயினும் நல்ல தலைவன் எம் வாயினும் மனத்தும் மருவி நின்று அகலா மாண்பின்ன்' என்று உமையின் முலைப் பால் அருந்திய ஞானசம்பந்தர் பாடியதை யாம் மறக்க முடியுமா? குரை கடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமலை அமர்ந்தவர் எம் குறைகள் தீர்ப்பது உறுதி.

எமது உரிமைக்காகப் போராடுமுன் எமக்குள்ள உரிமையை இழக்காது இருக்க முதலில் பழகிக்கொள்வோமாக, "தீதும் நன்றும் பிறந்தர வாரா, என்ற புறநானூற்றுப்புலவர் புகட்டிய உண்மை எமக்கு முற்றும் பொருந்தும்.

### புனித நகராகப் பிரகடனம் செய்! இன்றேல்....

இறுதியில் ஈழம் வாழ் சிவநெறி தழுவி நிற்கும் செந்தமிழ் மக்கள் சார்பிலும் இந்து மத நிறுவனங்கள் சார்பிலும் காலம் தாழ்த்தாது அனுராதபுரத்தை, களனியாவைப் புத்த மதத்தினருக்குப் புனித நகர்கள் ஆக்கியது போல் கோணேசர் கோட்டையை உடனடியாக இந்துக்களுக்குப்

[3-ம் கலம் பார்க்க]

(5-ம் கலத் தொடர்ச்சி)

புனித நகராகப் பிரகடனம் செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்கின்ரேம். நாட்டிலே சமய ஒற்றுமையை, அமைதியை அரசாங்கம் உண்மையில் நிலை நாட்ட விரும்பின் சைவப் பெருமக்களின் ஏகோபித்த வேண்டுதலை ஏற்றேயாக வேண்டும். இதைப் புறக்கணிக்கின் அதனுல் வரும் விளைவுகளுக்கும் அரசாங்கமே முழுப் பொறுப்பாளி என்பதையும் எச்சரிக்க விரும்புகிரேம்.

இப பத்திரிகை 10, பென்றிவ் தோட்டம், கொழும்பு - 3-ல் வசிக்கும் க. கு. ஆடியபாதன் அவர்களால் யாழ்ப்பாணம் 280, பெரியகடையிலுள்ள கலா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.